தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நந்தன, பங்குனி 23, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 ஏப்ரல் 5, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சுழன்றுமேர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

சுழன்று கொண்டிருக்கும் இவ்வுலகில் மக்கள் பல தொழில்களைச் செய்தாலும் அவையனைத்தும் உழவுத் தொழிலையே நம்பியுள்ளன. எனவே, முதன்மையான தொழிலாக விளங்குவது உழவுத் தொழிலே.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 150 மற்றும் 151 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

152—

அங்கன்வாடி மையம்

***14345—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 ஏப்ரல் 5

(அ) ஆரணி தொகுதி, மெய்யூர் காலனியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், எங்கெல்லாம் மக்கள் தொகையும், பயனாளிகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள் அமைக்கப்படவேண்டும் என்று ஆணையிட்டு, ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். அதனடிப்படையில் தமிழகத்தில் புதிதாக அங்கன்வாடி மையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் புதிதாக 85 அங்கன்வாடி மையங்கள் துவங்கப்பட உள்ளன. அவ்வாறு புதியதாகத் தொடங்கப்படும் மையங்களில், ஆரணி தொகுதி, மெய்யூர் காலனியும் அடங்கும் எனவே, அப்பகுதியில் விரைவில் அங்கன்வாடி மையம் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெய்யூர் காலனியில் அங்கன்வாடி மையம் ஆரம்பித்துத் தருவேன் என்று உறுதி அளித்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆரணி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வருடத்திற்கு நான்கு அங்கன்வாடி மையங்கள் கட்டித் தரப்படுகின்றன. ஆரணி தொகுதியைப் பொறுத்தவரையிலே, ஏறத்தாழ 60 அங்கன்வாடி மையங்களுக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றன. எனவே, ஆரணி தொகுதியிலே இருக்கக்கூடிய கொளத்தூர், காட்டேரி போன்ற பகுதிகளுக்கும்

அங்கன்வாடி மையங்கள் அமைத்துத்தர தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதியில் அங்கன்வாடி மையங்கள் தேவைப்படுகின்றன என்று குறிப்பிடுகிறாரோ, அந்தந்தப் பகுதியில் அங்கன்வாடி மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்படுகின்ற ரூ.10.00 இலட்சமானது, 2012-2013 ஆம் நிதியாண்டில் என் தொகுதிக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது. அதனால், அந்த நிதியிலிருந்து சமையல் எரிவாயு உருளை, சமையல் பாத்திரங்கள் மற்றும் குழந்தைகள் நல்ல ஆரோக்கியமான உணவு உண்பதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்க விரைந்து நடவடிக்கை எடுக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக அங்கன்வாடி மையங்கள் துவங்கப்படுகிறபோதே அனைத்து அடிப்படை வசதிகளுடன் குழந்தைகளுக்கு உணவு உண்பதற்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த மையங்களில் இதுபோன்று உபகரணங்கள் வழங்கப்பட் வேண்டும், அவர்களுக்குத் தேவையான

அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்று சொல்கிறாரோ அந்தப் பகுதிகளில் அவற்றை நிறைவேற்ற உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியிலுள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளியில் ஒரு அங்கன்வாடி மையம் உள்ளது. அந்த அங்கன்வாடி மையம் மிகவும் பழுதடைந்து இருக்கின்ற காரணத்தினால் 2011-2012, 2012-2013 ஆகிய இரண்டு நிதியாண்டுகளிலும் அந்தப் பள்ளியைச் சீரமைத்து, புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், அந்தப் பள்ளியின் நிருவாகத்தினர் அங்கே அங்கன்வாடி மையம் கட்டுவதைத் தடுத்து வருகின்றனர். வேறு இடமும் அந்தப் பள்ளிக்கென்று இல்லை. எனவே, அந்தப் பள்ளி செயல்படுகின்றபட்சத்தில் அங்கே அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையங்களில் பெரிய பழுதுள்ள 1,202 மையங்களைச் சரி செய்ய ரூ.39.14 கோடியும், சிறிய பழுதுள்ள 10,602 மையங்களைச் சரி செய்ய ரூ.84.79 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தப் பள்ளி, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவினைப் பெற்று உடனடியாக சீரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

2013 ஏப்ரல் 5]

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பாளையம் என்ற ஊரில் உள்ள குறிஞ்சி நகரில், தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்று குழந்தைகள் காப்பகத்தை நடத்தி வருகிறது. அந்த குழந்தைகள் காப்பகம் சமூக நலத் துறையின் அனுமதி பெற்று, துறையின் நிதியுதவியுடன் நடந்து வருகிறது. பஸ் மற்றும் இரயிலில் தவறி வருகின்ற குழந்தைகள் அந்தக் காப்பகத்தில்தான் ஒப்படைக்கப்படுகிறார்கள். அந்த காப்பகத்தில் 230 குழந்தைகள் கல்வி பயின்று வருகிறார்கள். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் அந்தக் குழந்தைகளுக்கு அரசாங்கத்தின் இடைநிலை ஆசிரியர்கள்மூலம் கல்வி கற்பிக்கப்படுகிறது. அதேபோன்று ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க போதிய ஆசிரியர்களை அங்கே நியமனம் செய்ய அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் காப்பகத்தில் இதுபோன்ற குறைகள் இருக்கின்றன என்பதை குறிப்பிட்டு எழுதிக் கொடுப்பாரேயானால், உடனடியாக அங்கே ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

153—

பொறியியல் கல்லூரி

***7040—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—